# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/D.C/8–11, 29–06–2009 நாளிட்டது )

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகையத் திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/SC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு –2–இல் வெளியிட்டுள்ளது :–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த விதித் தொகுப்பு, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று கூறப்படும்.

b) இது, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 51 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 51 ஆம் ஒழுங்குமுறைவிதியில், : –

(i) (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், (a), (b), (c) மற்றும் (d) ஆகிய கூறுகளுக்குப் பதிலாக பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன :–

(a) ஆணையத்தின் உறுப்பினராக இருக்கிறவர் தலைவர் ஆவார்.

(b) மாநில மின்செலுத்துப் பணி நிறுவனத்தின் தலைமைப்பொறியாளர் படி நிலைக்குக் குறையாதிருக்கிறவர் உறுப்பினர்–செயலாளர் ஆவார்.

(c) மின் சுமை பகுப்பு மையத்தின் தலைமைப் பொறியாளர் படி நிலைக்குக் குறையாதிருக்கிறவர் ஓர் உறுப்பினர் ஆவார்.

(d) ஒவ்வொரு மின் பகிர்மான உரிமம்தாரர்களிலிருந்து தலைமைப் பொறியாளர் படிநிலைக்குத் குறையாதிருக்கிற ஒரு பிரதிநிதி.

(ii) (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், கடைசியில் பின்வரும் வாக்கியங்கள் புகுத்தப்படுதல் வேண்டும்; அதாவது :–

‘‘ உறுப்பினர் –செயலாளர் விதித்தொகுப்பின் மறு ஆய்வுக்குழு தலைவருடன் கலந்தாய்வு செய்து குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வார். (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (f), (g) மற்றும் (h) கூறுகளின்படி குறிப்பிடப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும். ஆணையம், அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைந்ததன் பேரில், உறுப்பினர் எவரையும் மறு–நியமனம் செய்வதற்கு அதிகாரங்கள் உடையது ஆகும்.’’

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்